ගොවිජන සංවර්ධන දෙපාර්තමේන්තුව
கமநல அபிவிருத்தித் திணைக்களம்
DEPARTMENT OF AGRARIAN DEVELOPMENT

මගේ අංකය / எனது இல. / My No. 7/5/15/5
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 25.06.2020

சுற்றுநிருப இலக்கம் : 08/2020

மாவட்டத்திற்குப் பொறுப்பான
சகல கமநல அபிவிருத்தி பிரதி/உதவி ஆணையாளர்கள்,
சகல கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர்கள்,
சகல விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள்.

## அரச உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்தல்

கமநல சேவைகள் நிலையங்கள் மற்றும் கமநல அபிவிருத்திச் சபைகள்/கமநல சேவைகள் நிர்வாகக் குழுக்கள், பிரதேச நிறுவன அலகுகளாக செயற்படுவதாலும் மற்றும் அவைகள் வணிக ரீதியான மற்றும் நிதி நடவடிக்கைகளில் ஈடுபடுவதால், கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் மற்றும் இருப்புக் கட்டுப்பாடுகள் இற்றைப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்படுவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக அபிவிருத்தி அலகாக, கமநல சேவைகள் நிலையங்களும், கமக்காரர்களின் நிறுவனமாக கமநல அபிவிருத்திச் சபை/கமநல சேவைகள் நிர்வாகக் குழுவும் தமது பணிகள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

02. எனவே மேற்படி தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமாகும் முறையில் கமநல சேவைகள் நிலையங்கள், கமநல அபிவிருத்திச் சபை/கமநல சேவைகள் குழு மற்றும் மாவட்ட அலுவலகங்களின் நடவடிக்கைகள் அடிக்கடி கணக்காய்விற்கு உட்படுத்தப்படுகின்றது. இச்செயற்பாடுகளை நிறைவேற்றும் போது, அதன் நேரடிப் பொறுப்பு மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி / உதவி ஆணையாளர்கள், கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர்கள், நிலைய முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தியாளர்களுக்கும் பொறுப்பளிக்கப்படுகின்றது.

03. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணத்தின் நி.பி. 880 மற்றும் உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 07/2019 என்னும் இலக்கமுடைய 23.03.2019 ஆந் திகதிய கடிதத்தின் பேரில் தங்களது அவதானத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

ගොවිජන සංවර්ධන දෙපාර්තමේන්තුව, අංක 42, ශ්‍රීමත් මාර්කස් ප්‍රනාන්දු මාවත, තැ.පෙ. 537, කොළඹ 07.
கமநல அபிவிருத்தித் திணைக்களம், இல. 42, சேர் மார்கஸ் பெர்னாந்து மாவத்தை, அ.பெ. 537, கொழும்பு 07.
DEPARTMENT OF AGRARIAN DEVELOPMENT, No. 42, SIR MARCUS FERNANDO MAWATHA, P.O. BOX. 537, COLOMBO 07.
දුරකථන/ தொலைபேசி/ Telephones :
පොදු කාර්යාලය / பொது அலுவலகம் / General Office: 011 2694231, 011 2694232, 011 2694233, 011 2694234
ගොවිජන සංවර්ධන කොමසාරිස් ජනරාල් / கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் / Commissioner General of Agrarian Development: 011 2691060
ෆැක්ස් / தொலை நகல் / Fax: 011 2693572, 011 2691843, 011 2674481
E - mail : commissionerdad@yahoo.com
විදුලි පණිවුඩ / தந்தி / Telegram: ගොවිජනසේවා / கொவிசேவா / Agraservis

04. பல்வேறு நிதி முறைகேடுகளால் அரச நிதி துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகவும் மற்றும் அப்பணம் அரசாங்கத்திற்கு இழப்பாவதால், உத்தியோகத்தர்களும் அசௌகரியங்களுக்கு உட்படுவதாக கணக்காய்வாளர் தலைமையதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். எவரேனுமொரு உத்தியோகத்தரிடமிருந்து பணம் ஏதேனும் அறவிடப்பட வேண்டியிருப்பின், அதனைச் செலுத்தும் முறையாகப் பிணை வைப்பு முறையை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணத்தின் 880 வது பந்தியில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

05. அதற்கமைய அரச உத்தியோகத்தர்கள் பிணை வைப்பிலிடப்பட வேண்டிய பணத்தின் எல்லைகள் மற்றும் பிணை வைப்பிலிடப்பட வேண்டிய முறைகள் கீழ் காட்டப்பட்டுள்ளவாறாகும்.

| தொ. இல. | பதவிப் பெயர் | சேவை | பிணை வைப்பிடப்பட வேண்டிய அளவு | பிணைப் பணம் அறவிடப்பட வேண்டிய முறை |
|---|---|---|---|---|
| 01 | பிரதி/உதவி ஆணையாளர் | இ.நி.சே. | 15,000.00 | ரூபா 5000.00 ஆரம்ப வைப்புப் பகுதியாகவும் மற்றும் மிகுப் பணம் 04 தவணைகளில் |
| 02 | கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் | திணைக்களம் சார்ந்த | 15,000.00 | ரூபா 2,500.00 ஆரம்ப வைப்புப் பகுதியாகவும் மற்றும் மிகுப் பணம் 05 தவணைகளில் |
| 03 | நிலைய எழுதுனர் | திணைக்களம் சார்ந்த | 5,000.00 | ரூபா 1,000.00 ஆரம்ப வைப்புப் பகுதியாகவும் மற்றும் மிகுப் பணம் 04 தவணைகளில் |
| 04 | விவசாய ஆராய்சி உற்பத்தி உதவியாளர் | திணைக்களம் சார்ந்த | 2,500.00 | ரூபா 500.00 ஆரம்ப வைப்புப் பகுதியாகவும் மற்றும் மிகுப் பணம் 04 தவணைகளில் |

06. இச்சுற்றுநிருபம் வெளியிடப்பட்டதன் பின்னர் மேற்படி அட்டவணைக்கமைய உரிய பிணைப் பணத்தைப் பெற்றுக் கொண்டு அவர்களை அச்சேவைகளில் ஈடுபடுத்தல் வேண்டும் என அறியத் தருகின்றேன்.

**ஒப்பம்: டபிளியூ.எம்.எம்.பீ. வீரசேகர,**
**கமநல அபிவிருத்த ஆணையாளர் நாயகம்.**

பிரதிகள்:

1. கணக்காய்வாளர் தலைமையதிபதி - தேவையான தொடர் நடவடிக்கைகளின் பொருட்டு
2. செயலாளர், மகாவெலி, விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - தயவான அவதானத்தின் பொருட்டு
3. பிரதான காரியாலயத்தின் ஆணையாளர்கள - தேவையான தொடர் நடவடிக்கைகளின் பொருட்டு
4. பிரதான கணக்காளர் - தேவையான தொடர் நடவடிக்கைகளின் பொருட்டு
5. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - தேவையான தொடர் நடவடிக்கைகளின் பொருட்டு
6. பிரதான காரியாலயத்தின் சகல உதவி ஆணையாளர்கள் - தேவையான தொடர் நடவடிக்கைகளின் பொருட்டு